

அரியலூர் மாவட்டம் தா.பழூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில்,கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, பொற்பதிந்த நல்லூர் ஊராட்சி சிலால், அணைக்குடம் ஆகிய இடங்களில்,கோடைகால தண்ணீர் பந்தலை,ஒன்றிய கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர்,தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, இளநீர், வெள்ளரி பிஞ்சுகள் வழங்கினார். இந்நிகழ்வில் பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் இரா.அண்ணாதுரை, அவைத்தலைவர் எஸ்.சூசைராஜ்,ஒன்றிய துணை செயலாளர்கள் க.சாமிதுரை, இந்துமதி நடராஜன்,அ.இராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.தமிழ்ச்செல்வன், சி.கண்ணதாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா.சங்கர், த.குணசீலன்,க.நளராசன், நீல.மகாலிங்கம் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் , முதலமைச்சர் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம் செல்வபுரம் பகுதிக் கழகம் 78 வது வட்டக் கழக தி.மு.க. சார்பில் சிவாலயா அருகில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி, ஈஸ்வரசாமி எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 1500 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். பகுதி செயலாளர் கேபிள்மணி ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் ஜெயந்தி, அறிவழகன், சிவசக்தி, ராஜ்குமார், கார்த்திக்செல்வராஜ், ஜெய்லாப்தீன், தென்னைசிவா, வேலுச்சாமி, தளபதி தியாகு, உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சட்டமன்ற – நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் – ‘இலக்கியச் செல்வர்’

# குமரி அனந்தன் மறைவு: தமிழ்நாடு சட்டப்பேரவை இரங்கல்!

## பேரவைத் தலைவர் புகழாரம் சூட்டினார்!

சென்னை, ஏப்.11-

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலை கூடியதும், திருக்குற ளும் அதன் விளக்கமும் படிக்கப்பட்ட பின்னர், பேரவைத் தலைவர் அவர்கள், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தைப் படித்தார்.

பேரவைத் தலைவர் குறிப்பிட்டதாவது :-

‘இலக்கியச் செல்வர்’ என்று அழைக்கப்படும் குமரி அனந்தன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து பெருந்தலைவர் காமராசரின் அடியொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக்காக தன்னை ஒப்படைத்துக்கொண்டவர்.

அனைவரிடத்திலும் அன்போடும் நட்புணர்வோடும் பழகக்கூடிய குமரி அனந்தன் அவர்கள் 1980-1984, 1985-1988, 1989-1991 மற்றும் 1991-1996 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1977-1980 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பாராட்டத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய காரணத்தால், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் “தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்து விட்டார்” என இவருக்குப் புகழாரம் சூட்டினார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியதற்காக இவருக்கு தமிழ்நாடு அரசால் 2024 ஆம் ஆண்டு “தகைசால் தமிழர் விருது” இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் உள்ளிட்ட அவருடைய குடும்பத்தினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு கூறினார்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

### இந்தியாவுக்கே வழிகாட்டும் வகையில், மாநில அரசின் உரிமையை நிலைநாட்ட

# உச்சநீதிமன்றத்தில் சிறப்பான தீர்ப்பை பெற்றுத் தந்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி!

## நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக இளைஞரணி அறிமுகக் கூட்டத்தில் தீர்மானம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.- தமிழன் பிரசன்னா - ஆலந்தூர் இளமாறன் பங்கேற்பு!

நாமக்கல், ஏப்.11-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை மற்றும் அறிமுக கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் வரவேற்றார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக, திமுக மாநில செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா மற்றும் சமூக வலைதள பயிற்சியாளர் ஆலந்தூர் இளமாறன் ஆகியோர் பங்கேற்று, திமுகவின் முந்தைய கால வரலாறு குறித்தும், எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வது தொடர்பாகவும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

முன்னதாக, தமிழ்நாடு சட்டசபையில் நிறை வேற்றப்பட்ட மசோதாக்களை, தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி நிறுத்தி வைத்தது, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்கில், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. கவர்னர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்த 10 மசோதாவுக்கும் சுப்ரீம் கோர்ட் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி நீதிபதிகள் அதிரடியாக ஒப்புதல் அளித்தனர். அமைச்சரவை அறிவுரையின்படி மட்டும் தான் மாநில ஆளுநர் செயல்பட முடியும். தன்னிச்சையாக செயல்பட அவருக்கு அதிகாரம் இல்லை என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தி, மாநிலங்களின் உரிமைகளை மீண்டும் உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தீர்ப்பினை பெற்றுத் தந்த கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை பாராட்டி, இந்திய அளவில் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வரலாற்று சாதனை படைத்துள்ளதையடுத்து அவரை பாராட்டும் வகையில், கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர்.

இந்த கூட்டத்தில், மாநில இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள். பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணைமேயர் செ.பூபதி, நகரக் கழக செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கிருபாகரன் மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், எம்பரார் வ.இளம்பரிதி, எம் கார்த்திக், இரா கலைவாணன், ரமேஷ், பிரபாகரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி

# ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

## மாவட்டக் கழக செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை!

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.4.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் மேலப்பாளையம், மாவட்டக் கழக அலுவலகம் (அம்பாசமுத்திரம் ரோடு, ரிலையன்ஸ் பல்க் அருகில்) நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODEமூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் QR CODEமூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**இரா.ஆவுடையப்பன்**

செயலாளர்,

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு சட்டமன்றத்தையும், சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டு மக்களையும் அவமதிப்பதையே வேலையாகக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் சட்டவிரோதம் என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்சநீதிமன்றம் மகத்தானத் தீர்ப்பளித்துள்ளது. இந்த தீர்ப்பை வரவேற்று புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் முன்பு மாநகர தி.மு.க.சார்பில் மாநகர தி.மு.க.பொறுப்பாளர் வே.ராஜேஷ் தலைமையில் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் தீர்ப்பை வரவேற்று மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் மாநகர தி.மு.க. துணை செயலாளர் .ப.ரெங்கராஜன், மாமன்ற உறுப்பினர் சி.மதியழகன், வட்ட கழக செயலாளர்கள் கண்மணி சுப்பு, பூக்கடை முருகேசன், தெட்சிணாமூர்த்தி, செ செ.ரமேஷ், மற்றும் நிர்வாகிகள் கணேசன், சரத், மீனாட்சி சுந்தரம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் – ஆவுடையார் கோவிலில்

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மருத்துவ முகாம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஏப்.11-

அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஆவுடையார் கோவிலில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை, புதுக்கோட்டை டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு அறந்தாங்கி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும் , ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான உதயம் சண்முகம் தலைமை தாங்கினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதி ராஜன் முன்னிலை வகித்தார்.

சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

முகாமில் மாநில தீர்மான குழு உறுப்பினர் சி.ராமநாதன், மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் வே.பொன்துரை, சக்திராமசாமி, பொன். கணேசன், எஸ்.எம்.சீனியார் பொதுக்குழு உறுப்பினர் வீரையா , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணி ராஜன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ . க லை ச் செல் வ ன் , மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், அறந்தாங்கி முன்னாள் ஒன்றிய குழு தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவகுமார், ஆவுடையார் கோவில் ஒன்றிய அவைத் தலைவர் கேசவன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் மதியழகன், மாணிக்கம், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சுரேஷ், காளீஸ்வரன், திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஹாஜா மைதீன், கார்த்திகா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஜீனத் ஐஸ்வர்யா, வினோதன், நைனா முகமது, கார்த்திக், சந்திரசேகர், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் உதயம் சிவசங்கர், அகிலன் சின்னக்கருப்பன், மாணிக்கவாசகம் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில்வேலன் செய்து, வரவேற்றார். திமுக தொகுதி ஒருங்கிணைப்பாளர் சமூக வலைதளம் அடைக்கலம் நன்றி கூறினார்.




தமிழ்நாடு ஆளுநரின் எதேச்சதிகார போக்கைக் கண்டித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு கழக வழக்கறிஞர் அணி சார்பில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கியும் வழக்கறிஞர் அணி மாநகர மாவட்ட அமைப்பாளர் அன்புச் செழியன் தலைமையில் சிறப்பாக கொண்டாடப் பட்டது. கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.உடன் கழக வழக்கறிஞர்கள் திரளாக பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ப.உ. சண்முகம்

## ஏப்ரல் 11 (2007)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.

“தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்கு கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**